அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 233/2019

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 22.09.2025

பெயர் ஹரிஸ் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. இந்த வழக்கில் 1, 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய ஆவணம் செல்லாது என்று கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தபசில் சொத்து பாபா நகர் லேயவுட் உள்ள சொத்து என்றால் சரிதான். பாபா நகர் லேயவுட்டில் மொத்தமாக 4 ஏக்கர் 92 சென்ட் இடம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் லேயவுட் பாபா நகருக்குரியது என்றால் சரிதான். ( **பாபா நகர் லேயவுட் நகல் பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனது பிராதில் மேற்கூறிய 4 ஏக்கர் 92 சென்ட் எனக்கு பூர்வீகமாக கிடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் அதற்கு ஆதரவாக வா.சா. ஆ 1 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ 1 பட்டாவில் குறிப்பிட்டுள்ள 5 பெயர்களில் போலையன் நாயுடு

மற்றும் கோவிந்தன் என்னுடைய தாத்தா ஆவார்கள். மற்ற மூன்று நபர்கள் உறவினர்கள் ஆவார்கள். மேற்கூறிய 5 நபர்களும் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டார்கள். வா.சா.ஆ 3 பவர் பத்திரம் படி 12ம் பிரதிவாதிக்கு 3 முதல் 11 பிரதிவாதிகள் பவர் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பவர் கொடுத்தபோது அந்த விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 3 பவர் பத்திரத்தில் பக்கம் 4ல் உள்ள பத்தியில் எவ்வாறு 12ம் பிரதிவாதிக்கு பவர் கொடுக்கப்பட்டது என்ற விவரம் உள்ளது என்றால் சரிதான்.

3.அதில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், மோரை மதுரா புலக்குத்தி கிராமத்தில் போலைய்யா குமாரர் கோவிந்தன் (i) கோவிந்தன் குமாரர் வீராசாமி (ii) ஆகிமூலம் குமாரர் ராமைய்யா (iii) மற்றும் கிருஷ்ணன் அவர்களின் குமாரர் டில்லி (iv) மற்றம் கொண்டால் குமாரர் முத்து (V) பெயர்களில் தாக்கலாகியுள்ள கூட்டு பட்டா எண் 584 ன் படி சார்வே எண்கள் 59/1A, 59/1B, 59/1C– க்கு கூடிய மொத்த விஸ்தீரணம் ஏக் 6.41 சென்ட் நிலமானது எங்களில் 2 முதல் 4 வரை உள்ள நபர்களுக்கு பாட்டனாருமான வீராசாமி அவர்கள் காலமானதை தொடர்ந்து அவருடைய வாரிசான எங்களது தகப்பனார் காலமானதை தொடர்ந்து அவருடைய வாரிசான வாரசுகளான இவர்கள் மூவருக்கும் கிடைக்கப்பெற்ற சொத்தையும் மற்றும் 5 முதல் 7 வரை உள்ள நபர்களுக்கு தகப்பனார்ராமைய்யா அவர்கள் காலமைாதை தொடர்ந்து அவருடைய வாரிசுளான இவர்கள் மூவரும் கிடைக்கப்பெற்ற சொத்தையும் மற்றும் 1 வது நபருக்கு தகப்பனார் கோவிந்தன் அவர்கள் காலமானதை தொடர்ந்து அவருடைய வாரிசான இவருக்கு கிடைக்கப்பெற்ற சொத்தையும் மற்றும் 8,9 உள்ள நபருக்கு கிடைக்கப்பெற்ற மேற்படி சொத்தையும் நாங்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக சொத்தை பிரிக்கப்படாமல் எவ்வித

வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் ஆண்டு அனுபவித்து வரும் மேற்படி நிலத்தை மனைகளாக பிரித்து அதற்கு பாபா நகர் என பெயரிடப்பட்டு விற்பனை செய்து வருவதில் நாங்கள் ஏற்கனவே விற்றது போக கீழ்கண்ட சொத்து விவரத்தில் மனைகளை எங்களால் நேரடியாக இருந்து பராமரிக்க முடியாமலும், அடிக்கடி நாங்கள் வெளியூர் செல்வதினாலும், விற்பனை செய்யும் காலத்தில் எங்களால் நேரடியாக வர இயலாத காரணத்தினால் உங்களை எங்களுடைய பவர் ஏஜெண்ட்டாக நியமித்து இந்த பொது அதிகாரப்பத்திரம் மூலம் கீழ்கண்ட அதிகாரங்களை உங்களுக்க அளிக்கின்றோம் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது.

4. அதன் அடிப்படையில் 12ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு 28.03.2012 அன்று வா.சா.ஆ 4 கிரையஆவணம் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் அந்த கிரையம் போலியானது. வா.சா.ஆ 4 ஆவணத்தின் சான்றிட்ட நகலை எப்போது பெற்றேன் என்றால் 2019 வருடத்தில். வா.சா.ஆ 4 ஆவணத்தில் பாபா நகர் லெயவுட் ஸ்கேட்ச் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ 1 ல் சர்வே எண் 59/1A,1B, மற்றும் 1C கான மனைகள் காட்டப்பட்டுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி எனது முதல் அக்கா , 2ம் வாதி எனது 2ம் அக்கா ஆவார். வாதிகள் மூவரும் ஸ்ரீநிவாசன் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ 3 மற்றும் 4 ஆவணங்களில் ஸ்ரீநிவாசன் என்பவர் தான் முதல் நபராக குறிப்பிடப்பட்டுள்ளார் என்றால் சரிதான். வாதிகளுக்கு தெரியாமல் எனது தந்தை கையொப்பம் செய்துள்ளார். வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாகபிரிவினை வழக்கு கேட்டுள்ளேனா என்றால் இல்லை. 6 ஏக்கர் 41 சென்ட் சொத்து என்னுடையது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ 5

செட்டில்மென்ட் பத்திரம் படி 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மென்ட் செய்ததாக குறிப்பு உள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு பிறகு தான் தெரியும். வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி 3 முதல் 11 பிரதிவாதிகளுக்கு தான் அந்த சொத்தில் முழுஉரிமை உள்ளது என்பதால் அவர்கள் வேறு யாரிடமும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் எனது தந்தை வாதிகளிடம் சொல்லாமல் கையொப்பம் செய்துள்ளார். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் அதில் வாதிகளுக்கும் உரிமை உள்ளது.

6. நான் வா.சா.ஆ 1 பட்டா அடிப்படையில் தான் சொத்து உரிமைகோருகிறேனா என்றால் எனது தாத்தா பட்டாவின் படி அனுபவித்து வந்த சொத்தில் வாதிகளுக்கும் உரிமையுள்ளது. வா.சா.ஆ 2 சிட்டாவில் கோவிந்தன், வீராசாமி, கில்லிநாயுடு, ராமையநாயுடு, முத்து ஆகியோர் பெயரில் உள்ளது. இந்த வழக்கில் எனக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று தனிப்பட்ட பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. 6 ஏக்கர் 41 சென்ட் சொத்திற்கு மொத்தமாக கேட்காமல் 1662 சதுரஅடி சொத்திற்கு மட்டும் ஏன் குறிப்பிட்டு பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் மற்ற உறவினர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி சமரசம் ஆகியுள்ளோம் மேற்கூறிய 1662 சதுரஅடி சொத்திற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் எந்த பதிலும் இல்லாததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

7. மேற்கூறிய விவரத்தை பிராது மற்றும் நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் தற்போது கேட்டதால் நீதிமன்றதில் சொல்கிறேன். எனது தந்தை சொத்தை விற்றுவிட்டதால் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றாலும் நான் எனது தந்தைக்கு எதிராக மட்டும் தான் பரிகாரம் கோரமுடியும் என்றாலும் சரியல்ல. பிளாட்

எண் 89, 90 யார் கிரையம் பெற்றுள்ளார்கள் என்று தெரியாது. பிளாட் எண் 89,90 2ம் பிரதிவாதியின் தந்தை சாம்ராஜ் கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. எனக்கு அந்த விவரங்கள் எல்லாம் தெரியாமல் சமரசம் பேசிவிட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காலவரையரை சட்டம் படி வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.